



# கிறிஸ்துவின் வசனம்

ஆசிரியர்
B. அர்ச்சுனன்

## சபைக்கு நாமம் (பெயர்) மிக முக்கியம்.

## The Name is very important to the Church.

1. என் நாமம் தரிக்கப்பட்ட ஆலயத்திலே எரேமி. 34:15.
2. நான் கர்த்தர், இது என் நாமம் ஏசாயா 42:8.
3. கடைசி நாட்களில் கர்த்தருடைய ஆலயமாகிய பர்வதம் ஏசாயா 2:2-3.
4. என் சபையைக் கட்டுவேன் மத்தேயு 16:18.
5. தமது சபையை மேய்ப்பதற்கு அப்போஸ்தலர் 20:28.
6. கிறிஸ்து பிரிந்திருக்கிறாரா 1 கொரி. 1:13.
7. நீங்கள் எதைச் செய்தாலும் கொலோ. 3:17.
8. இயேசு கிறிஸ்துவை அல்லாமல் வேறே 1 கொரி. 3:17.
9. எல்லாவற்றையும் அவருடைய எபேசி. 1:22-23.
10. எல்லா நாமத்திற்கும் மேலான நாமத்தை பிலிப்பியர் 2:11.
11. அவரே சபையாகிய சரீரத்திற்கு கொலோ. 1:18.
12. என் நாமத்தை மறுதலியாமல் வெளி. 3:8.
13. இந்த இரகசியம் பெரியது எபேசி. 5:32.
14. கிறிஸ்துவின் சரீரமான சபையானது எபேசி. 4:12.
15. கிறிஸ்துவின் சபையார் ரோமர் 16:16.

இயேசு கிறிஸ்துவைப் பின்பற்றுகிற எல்லாரும் அப். 11:26 வேதவசனப்படி கிறிஸ்தவர்கள் என்றே அழைக்கப்படுகின்றோம். ஆனால் நீங்கள் எந்த சபையைச் சேர்ந்தவர் என்று கேட்டால் இயேசுவின் நாமம் அல்லாத ஒரு நாமத்தைச் சொல்லி கிறிஸ்தவர்கள் என்று சொல்லிக் கொள்வது நியாயமா? மேற்கண்ட வசனங்களை ஆராய்ந்து பாருங்கள்.

******

*Published by*

**WORLD LITERATURE PUBLICATIONS**

**POST BOX.5**

***BATLAGUNDU - 624 202***

***INDIA***

# கிறிஸ்துவின் வசனம்

## WORD OF CHRIST

புதிய ஏற்பாட்டுத் தூய கிறிஸ்தவ மாத இதழ்

மரம் 6 | செப்டம்பர் 1997 | கனி 2

ஆசிரியவுரை

## சுயாதீனம்
## Liberty

இந்த உலகத்தில் ஜீவிக்கிற நாம் ஒவ்வொருவரும் சுயாதீனத்திற்கு அழைக்கப்பட்டிருக்கிறோம். யாரும் யாருக்கும் அடிமை கிடையாது. நாம் யாரையும் அடிமை கொள்ளவும் கூடாது. பாவத்திற்கு அடிமையாயிருந்த மக்களை விடுதலை செய்யும்படியாக ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து வெளிப்பட்டார். தேவன் மனிதனை மண்ணினாலே உருவாக்கி அவனுக்கு ஜீவசுவாசத்தைக் கொடுத்து சகலத்தையும் ஆண்டுகொள்ள சுயாதீனமான நிலையிலே அவனை நிறுத்தி வைத்தார். தானாகவே தேர்வு செய்யவும், அடிமையில்லாது சுயாதீனமாக இருக்க மனிதன் படைக்கப்பட்டான். ஆனால் பாவத்தின் விளைவால் அதற்கு அடிமையாகி சுயாதீனத்திலிருந்து தள்ளப்பட்டான். இப்படித் தள்ளப்பட்ட மனிதனை மீண்டும் காக்க சுயாதீனப்பிரமாணத்தை கர்த்தர் அவருடைய குமாரன் மூலமாய்க் கொடுத்து அவனை மீண்டும் சுயாதீனனாக மாற்றுகிறார்.

சுயாதீனத்தைப் பெற்றுக்கொண்டவர்களில் சிலரையே நாம் பார்க்க முடிகிறது. ஆனால் அநேகர் நாங்கள் சுயாதீனமாக இருக்கிறோம் என்று சொல்லி தங்களைத் தாங்களே தேற்றிக் கொள்கிறார்கள். உண்மையிலேயே அவர்கள் சுயாதீனமாக இருக்கிறார்களா என்று ஆராய்ந்து பார்த்தால் இல்லவே இல்லை. காரணம் சுயாதீனப்பிரமாணத்தைக் கொடுத்த கர்த்தரையே அவர்கள் இன்னும் அறியவில்லை. தேவனை அறிகிற அறிவை அடைந்தவர்கள் சுயாதீனமான நிலையில் நிலைகொண்டு ஆசீர்வாதம் பெறுவார்கள்.

ஏசாயா புஸ்தகத்தில் குறிப்பிட்டுள்ளபடி கர்த்தருடைய ஆவியானவர் என்மேலிருக்கிறார்; தரித்திரருக்குச் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கும்படி என்னை அபிஷேகம் பண்ணினார்; இருதயம் நறுங்குண்டவர்களைக் குணமாக்கவும், சிறைப்பட்டவர்களுக்கு விடுதலையையும், குருடருக்குப் பார்வையையும் பிரசித்தப்படுத்தவும், நொறுங்குண்டவர்களை விடுதலையாக்கவும், கர்த்தருடைய அநுக்கிரக வருஷத்தைப் பிரசித்தப்படுத்தவும் என்னை அனுப்பினார்

என்று லூக்கா 4:18-ல் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து குறிப்பிடுவதை வாசிக்கிறோம். பிரிய நண்பரே! பாவ பிசாசினால் பிடிக்கப்பட்டிருக்கிறீர்களா? சிறைப்பட்டவர்களாயிருக்கிறீர்களா? அல்லது கைவிடப்பட்ட சூழ்நிலையில் நொறுங்குண்டவர் களாயிருக்கிறீர்களா? நீங்கள் எந்நிலைமையிலிருந்தாலும் ஆண்டவர் இயேசுவின் சத்தத்திற்குச் செவிகொடுத்தால் இன்றே, இப்பொழுதே அவர் உங்களை விடுதலைச் செய்து ஆகாயத்துப் பறவைகளைப் போல மாற்றுவார். அப்பொழுது சுயாதீனமுள்ளவர்களாவீர்கள்.

கர்த்தருடைய ஆவி எங்கேயோ அங்கே விடுதலையுமுண்டு என்று 2 கொரிந்தியர் 3:17-ல் பார்க்கிறோம். ஆம்! நீங்கள் கர்த்தருடைய ஆவியை உடையவர்களாயிருந்தால் பாவத்திலிருந்து விடுதலை யாக்கப்பட்டு சுயாதீன நிலைமையிலிருப்பீர்கள். சகோதரரே! நீங்கள் சுயாதீனத்திற்கு அழைக்கப்பட்டீர்கள். இந்த சுயாதீனத்தை நீங்கள் மாம்சத்திற்கேதுவாக அநுசரியாமல், அன்பினாலே ஒருவருக் கொருவர் ஊழியஞ்செய்யுங்கள் (கலாத்தியர் 5:13). மேலும் அப்படியே அழைக்கப்பட்ட சுயாதீனன் கிறிஸ்துவினுடைய அடிமையாயிருக் கிறான். நீங்கள் கிரயத்துக்குக் கொள்ளப்பட்டீர்கள்; மனுஷருக்கு அடிமைகளாகாதிருங்கள் (1 கொரிந்தியர் 7:22-23). நாம் எல்லாரும் சுயாதீனத்திற்கு கிறிஸ்து இயேசுவுக்குள் அழைக்கப்பட்டுள்ளோம். இப்படி அழைக்கப்பட்ட நாம் சகோதரரை அடிமை கொள்ளலாமா? அன்பினாலே ஊழியம் செய்ய வேண்டுமே தவிர அவர்களுக்குத் தலைவராகக் கூடாது. யாருக்கு தேவன் தலைமைப் பொறுப்பைக் கொடுத்தார்? எல்லாவற்றையும் கிறிஸ்துவினுடைய பாதங்களுக்குக் கீழ்ப்படுத்தி அவருக்கல்லவா தலைமைப் பொறுப்பைக் கொடுத்தார். அப்படியிருக்கும்போது இன்றைய நாட்களில் சபைகளில் தலைகள் இருக்கிறார்களே! அது எப்படி சாத்தியமாகும்.

நீங்கள் தேவனை அறியாமலிருந்த போது, சுபாவத்தின்படி தேவர்களல்லாதவர்களுக்கு அடிமைகளாயிருந்தீர்கள். இப் பொழுதோ நீங்கள் தேவனை அறிந்திருக்க அல்லது தேவனாலே அறியப்பட்டிருக்க, பெலனற்றதும், வெறுமையானதுமான அவ் வழிபாடுகளுக்கு நீங்கள் மறுபடியும் திரும்பி, மறுபடியும் அவைகளுக்கு அடிமைப்படும்படி விரும்புகிறதெப்படி என்று கலாத்தியர் 4:8-9ல் குறிப்பிடுகிறார். இன்றும் அநேகர் இப்படித்தான் சுயாதீன நிலைமையில் அழைக்கப்பட்டிருந்தும் பேசாத, நடக்க மாட் டாத தேவர்களுக்கும், தேவிகளுக்கும் அடிமைப்பட்டு வீணான அவ் வழிபாடுகளுக்கு இசைந்து பாரம்பரியங்களைக் கற்றுக்கொண்டு விசு வாசத்தை விட்டு வழுவிப்போய்விடுகிறார்கள். பிரியமானவர்களே! மறுபடியும் அடிமைத்தனத்தின் நுகத்துக்குட்படாமல், கிறிஸ்து நம க்கு உண்டாக்கின சுயாதீன நிலைமையிலே நிலைகொண்டிருங்கள்

(கலாத்தியர் 5:1; 2:4). அப்பொழுது சமாதானத்தின் கர்த்தர் உங்களோடிருப்பார்.

மேலான அதிகாரமுள்ளவர்களுக்குக் கீழ்ப்படிகிறீர்கள். நீங்கள் நன்மை செய்கிறதினாலே புத்தியீன மனுஷருடைய அறியாமையை அடக்குவது தேவனுடைய சித்தமாயிருக்கிறது. சுயாதீனமுள்ளவர்களாயிருந்தும் உங்கள் சுயாதீனத்தை துர்க்குணத்திற்கு மூடலாகக்கொண்டிராமல்,தேவனுக்கு அடிமைகளாயிருங்கள் என்று 1 பேதுரு 2:15-16ல் குறிப்பிடுகிறார் பேதுரு. சுயாதீனத்தை நற்கிரியைகளுக்குப்பயன்படுத்தவேண்டுமே தவிர துர்கிரியைகளுக்கு அல்ல. நன்மை செய்கிறவன் தேவனால் உண்டாயிருக்கிறான். தீமை செய்கிறவன் தேவனைக் காணவில்லை. யோசேப்பு எகிப்திலே சுயாதீனனாக அரண்மனையில் விடப்பட்டிருந்தான். பாவம் அவனை மேற்கொள்ள வந்தும் அவன் பாவத்தை ஜெயித்தான். எப்படி? தேவனுக்கு அடிமையானதினால் தானே. மேலும் சுயாதீனமாக இருக்கிற நாம் பவுல் சொல்வதைப் போல நான் ஒருவனுக்கும் அடிமைப்படாதவனாயிருந்தும், நான் அதிக ஜனங்களை ஆதாயப்படுததிக் கொள்ளும்படிக்கு, என்னைத் தானே எல்லாருக்கும் அடிமையாக்கினேன் (1 கொரிந்தியர் 9:19). அதைப்போல நம்மையும் அடிமையாக்கிக் கொள்வோம்.

நம்மை சுயாதீன நிலையிலே நிலைநிறுத்தின ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவின் பூரண பிரமாணத்தை நாம் உற்றுநோக்க வேண்டியது மிக அவசியமாயிருக்கிறது. சுயாதீனப்பிரமாணமாகிய பூரண பிரமாணத்தை உற்றுப்பார்த்து, அதிலே நிலைத்திருக்கிறவனே கேட்கிறதை மறக்கிறவனாயிராமல், அதற்கேற்ற கிரியை செய்கிறவனாயிருந்து, தன் செய்கையில் பாக்கியவானாயிருப்பான் (யாக்கோபு 1:25). நான் எல்லாவற்றிலும் சரியாக இருக்கிறேன், ஒழுங்காக வேதம் வாசிக்கிறேன், தவறாது சபைக்குச் சென்று காணிக்கை கொடுக்கிறேன் என்று சொல்லிக் கொண்டு தன்னைத் தானே வஞ்சித்துக் கொண்டிருந்தால் எப்படி? கேட்கிற வசனத்தை மறக்காமல் அதன்படி இவ்வுலகில் சாட்சியாக ஜீவித்து, அதற்கேற்ற கிரியை நடப்பிக்கும்போது நாம் ஆசீர்வதிக்கப்படுவோம். மேலும் நம் செய்கையிலும் பாக்கியவானாயிருப்போம்.

சுயாதீன நிலைமையில் விடப்பட்ட நாம் எப்படி வேண்டுமானாலும் ஜீவிக்கலாம். கர்த்தர் கடைசியில் மன்னிப்பார் என்ற எண்ணம் அநேகருக்குள்ளிருக்கிறது. பிரியமானவர்களே ! சுயாதீனப் பிரமாணத்தினால் நியாயத்தீர்ப்படையப் போகிறவர்களாய் அதற்கேற்றபடி பேசி, அதற்கேற்றபடி செய்யுங்கள் என்று யாக்கோபு 2:12ல் யாக்கோபு நம்மை எச்சரிக்கிறதை நாம் காணமுடிகிறது. சுயாதீனப் பிரமாணத்தில் ஜீவிக்கிற நாம் அதன்படி

போதிக்க வேண்டும், அதன்படி நடக்க வேண்டும். அநேகரை கிறிஸ்துவண்டை வழிநடத்த வேண்டும். அதைவிடுத்து பழைய பிரமாணத்தைப் பிடித்துக் கொண்டு நியாயப்பிரமாணம் இப்படிச் சொல்கிறது ஆகையால் நாங்களும் இப்படிச் செய்கிறோம் என்பீர்களாகில் இன்னும் நீங்கள் பழையவைகளுக்கு அடிமைப்பட்டிருக்கிறீர்கள் என்று தான் அர்த்தம். சுயாதீன நிலைமைக்கு வாருங்கள். இந்தப் பிரமாணத்தின் நியாயத்தீர்ப்புக்குக் காத்திருக்கிறோம்.

சத்தியத்தையும் அறிவீர்கள் சத்தியம் உங்களை விடுதலையாக்கும் என்று யோவான் 8:32ல் ஆண்டவர் குறிப்பிடுகிறார். அதற்கு யூதர்கள் நாங்கள் ஆபிரகாமின் சந்ததியாயிருக்கிறோம், நாங்கள் ஒருக்காலும் ஒருவனுக்கும் அடிமைகளாயிருக்கவில்லை. விடுதலையாவீர்களென்று நீர் எப்படிச் சொல்லுகிறீர் என்றார்கள். இயேசு அதற்குப் பிரதியுத்தரமாக பாவஞ்செய்கிறவன் எவனும் பாவத்திற்கு அடிமையாயிருக்கிறான்...ஆகையால் குமாரன் உங்களை விடுதலையாக்கினால் மெய்யாகவே விடுதலையாவீர்கள் (யோவான் 8:33-36) என்றார். பிரிய நண்பரே! அவர் கொடுக்கும் விடுதலையைப் பெற்று பாவத்திலிருந்து விடுபடுங்கள். அடிமைத்தனத்திற்குட்படாமல் சுயாதீன நிலைமைக்குத் திரும்புங்கள். கர்த்தர் தாமே உங்களுக்கு சுயாதீனப் பிரமாணத்தை இன்னும் அதிகமாக நினைப்பூட்டுவாராக!

## "கிறிஸ்துவின் சபை" நாங்கள் யார், எதை விசுவாசிக்கிறோம்?

ப. பால்ராஜ்

கிறிஸ்துவின் சபை மற்றுமொரு பிரிவுக்கூட்டம் என சிலர் கருதுகின்றனர். அருமை நண்பரே, இது உண்மையல்ல. கிறிஸ்துவின் சபை கிறிஸ்துவின் சரீரமாக இருக்கிறது. அது சீஷர்கள், பரிசுத்தவான்கள் அல்லது சகோதரர்கள் என தங்களை அழைத்துக்கொள்ளும் தனிப்பட்ட கிறிஸ்தவர்களை உள்ளடக்கியது. புதிய ஏற்பாட்டில், சபைக்காக கொடுக்கப்பட்டுள்ள எந்த பெயராலும் எங்களை அழைத்துக் கொள்வதில் நிறைவடைகிறோம்.

கிறிஸ்துவை தங்கள் இரட்சகராக விசுவாசிக்கும் மக்கள் மத்தியிலுள்ள பிரிவினைகளை நினைத்து நாங்கள் மிகவும் வருந்துகிறோம். திருவசனத்திற்கு முரணான பெயர்கள், கொள்கைகள், மற்றும் நடைமுறைகளை கொண்டியங்கும் பிரிவுச் சபைகளே தற்போதுள்ள பிரிவினைகளுக்கு காரணமாயுள்ளன.

அருமையான வாசகரே, இப்படிப்பட்ட பிரிவினை

அப்போஸ்தலர் காலத்தில் தலைதூக்கியபோது கண்டிக்கப்பட்டதென்பதை தயவுசெய்து கவனியுங்கள் (1 கொரி. 1:10-11; 3:1-4; கலாத்தியர் 1:6-9). ஆகவே பிரிவினைகள் தூய கிறிஸ்தவத்திற்கு முரணாயுள்ளன. கிறிஸ்து பிரிந்திருக்கிறாரா? (1 கொரி. 1:13) வித்தியாசமான பெயர்களை தரித்துக்கொண்டதால் பிரிந்திருந்த கொரிந்து சபையாரிடம் பவுல் இந்த கேள்வியைக் கேட்டார் (வசனம் 12). இதே பிரச்சனை இன்றும் நிலவுகிறது. இது கடிந்து கொள்ளப்பட்டு நிராகரிக்கப்பட வேண்டும் (2 யோவான் 10,11 வசனம்).

திருவசனங்களின்படி சபை 'கிறிஸ்துவின் சபை' என தெளிவாக அழைக்கப்படுகிறது. கிறிஸ்து தமது சபையை கட்டுவதாக வாக்குத்தத்தம் செய்தார் (மத்தேயு 16:18). பிராந்திய சபைகள் பல நகரங்களில் நிறுவப்பட்டபோது, அவைகள் 'கிறிஸ்துவின் சபைகள்' என அழைக்கப்பட்டன (ரோமர் 16:16).

சுவிசேஷம் பிரசங்கிக்கப்பட்டதையடுத்து சபை துவங்கியது என்பதை புதிய ஏற்பாட்டின்படி நாங்கள் விசுவாசிக்கிறோம். எருசலேம் துவங்கி சுசேஷத்தை பிரசங்கிக்கும்படி கிறிஸ்து கட்டளையிட்டார் (லூக்கா 24:47-49). இது தேவனுடைய வீடாகிய சபை (இராஜ்யம் அல்லது சரீரம்) எருசலேமில் நிறுவப்படும் என்ற ஏசாயா தீர்க்கதரிசனத்தின நிறைவேறுதலாயுள்ளது (1 தீமோ. 3:15, ஏசாயா 2:2-3, மீகா 4:1-2, தானியேல் 2:44, எபேசியர் 1:23, 4:4-6, கொலோ. 1:18) சுவிசேஷம் எல்லாமக்களையும் சென்றடையும்படி பிற இடங்களிலும் பிரசங்கிக்கப்பட்டது (மாற்கு 16:15), சபைகளில் ஒரே சீரான உபதேசமும் நடைமுறையும் இருந்தது (1 கொரி. 4:17, 7:17).

அப்போஸ்தலரும் கிறிஸ்தவரும் சுவிசேஷத்தை அறிவித்தனர். அதைக் கேட்டு விசுவாசித்து, திருமுழுக்கு பெற்ற அனைவரும் சபையில் சேர்த்துக்கொள்ளப்பட்டனர் (அப்போஸ்தலர் 2:36-38, 41; 1 கொரி. 12:13, கொலோ. 1:18,24).

**சபை அங்கத்தினர் என்ற முறையில் நாங்கள் கீழ்வருவனவற்றை விசுவாசிக்கிறோம்:**

1) நமது கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் உயிர்த்தெழுதலுக்கு பின்வந்த முதல் பெந்தெகொஸ்தே நாளில் 'கிறிஸ்துவின் சபை' ஸ்தாபிக்கப்பட்டது (கி.பி. 33–34). அப்போஸ்தலர் 2ஆம் அதிகாரத்தை முழுவதும் வாசியுங்கள். அது பெந்தெகொஸ்தே சபை அல்ல.
2) சுவிசேஷத்தை கேட்டு, விசுவாசித்து, மனந்திரும்பி, பாவ மன்னிப்பிற்காக, திருமுழுக்கு பெற்றவர் அனைவரும் சபையில் சேர்த்துக் கொள்ளப்பட்டனர் (அப்போஸ்தலர் 2:36–38, 41,47). இப்போது நாங்களும் அவ்விதமே செய்து கடைப்பிடிக்கிறோம்.
3) தேவனுடைய நியமனப்படி கிறிஸ்து ஒருவரே சபையின் தலைவர் (எபேசியர்

1;22–23, கொலோ. 1;18). சபைக்கு மனிதத்தலைவர்களோ, தலைமையகங்களோ பூமியில் இல்லை (கொலோ. 1;18, எபிரெயர் 12:1–2).

4) ஒவ்வொரு பிராந்திய சபையும் சுயஆட்சியுள்ளது. சபையின் பணிகளை கவனிக்க தகுதி பெற்றவர்கள் மூப்பர்களாக நியமிக்கப்படுகின்றனர் (அப்போஸ்தலர் 20: 17–28, 14:23). இவர்கள் கண்காணிகள், மேய்ப்பர்கள் அல்லது போதகர்கள் எனவும் அழைக்கப்படுகின்றனர் (தீத்து 1:5–9; 1 தீமோ. 3;1–7). பிலிப்பிய சபையிலிருந்தது போல சபையின் பணிகளில் மூப்பருக்கு உதவுவதற்காக ஒவ்வொரு பிராந்திய சபையிலும் உதவிக்காரர்கள் நியமிக்கப்படுகின்றனர் (பிலிப்பியர் 1:1). சுவிசேஷத்தை பிரசங்கிக்கிற சுவிசேஷகர்கள் அல்லது பிரசங்கிமாரும் உள்ளனர் (அப்போஸ்தலர் 8:5–13; 21:8; 2 தீமோ. 4:1–5).

5) சபை வாரத்தின் முதல் நாள் (ஞாயிறு) தோறும் கீழ்வரும் அம்சங்களோடு தேவனை ஆராதிக்கிறது.

அ) தேவ வசனம் பிரசங்கிக்கப்படுகிறது (அப். 20;7).

ஆ) தேவனை துதித்து மகிமைப்படுத்த இசைக்கருவிகளின் உபயோகமின்றி பாடல்கள் பாடப்படுகின்றன (எபேசியர் 5:19; கொலோ. 3:16).

இ) ஜெபித்தல் (அப். 2:42).

ஈ) காணிக்கை கொடுத்தல் (1 கொரி. 16:1-2; 2 கொரி. 9:6-8).

உ) அப்பம் பிட்குதல் (அப். 20:7).

6) இழந்து போனோரை மீட்க சுவிசேஷத்தை அறிவிப்பது, சபையில் பக்திவிருத்தி உண்டாக்குவது மற்றும் எளிய பரிசுத்தவான்களின் துயர்துடைப்பது ஆகியன சபையின் தெய்வீக பணிகளாகும்.

இப்படியாக எங்களுக்கு வேதபுத்தகம் (புதிய ஏற்பாடு) தவிர வேறு கொள்கை புத்தகங்கள் இல்லை. கிறிஸ்துவும் அவரது அப்போஸ்தலரும் சபைக்கு ஏற்படுத்திய தெய்வீகஒழுங்கு மீட்டு அமைக்கப்படுவதற்காக நாங்கள் முழுமனதோடு பாடுபடுகிறோம். மனிதக்கோட்பாடுகள் மறைந்துபோகவேண்டுமென ஜெபிக்கிறோம். அப்போது மாத்திரமே சபையின் ஒருமைப்பாடு மீட்டு அமைக்கப்படுமென நம்புகிறோம் !

இது தங்களுக்கு நியாயமாய், அறிவுப்பூர்வமாய் தோன்றுகிறதா? பிரிவு சபைகளையும், மனிதரையும் நம்பி தங்கள் அருமையான ஆத்துமாவை தயவுசெய்து நித்தியமாக இழந்துவிடாதீர்கள். தாங்கள் கிறிஸ்துவின் சபையின் அங்கத்தினராக மாற விரைந்து தீர்மான மெடுப்பீர்களென ஜெபத்தோடும் நம்பிக்கையோடும் காத்திருக் கிறோம் (அப்போஸ்தலர் 2;37-41, 47; ரோமர் 16:16; மத்தேயு 16:18).

தாங்கள் கிறிஸ்துவின் சபைக்கு எப்போதும் வரவேற்கப்படுகிறீர்கள்.

# உங்கள் பிள்ளைகளுக்குக் கருத்தாய் போதியுங்கள்
# Teach thy Children Diligently

J. ஜுலோரி அர்ச்சனன்

அன்பான சகோதரிகளே ! நம் பிள்ளைகளுக்குப் போதனையானது மிக அவசியம். பிள்ளையானவன் நடக்கவேண்டிய வழியிலே அவனை நடத்து; அவன் முதிர்வயதிலும் அதை விடாதிருப்பான் என வேதம் கூறுகிறது. பிள்ளைகளை வளர்க்கும் பொறுப்பு சகோதரிகளுக்கு தான் அதிகம் என்று கூறினால் அது மிகையாகாது. ஏனென்றால் பிள்ளைகளுடன் அதிகமான நேரத்தை செலவிடுவது தாய்மார்கள் தான். நாம் நம் பிள்ளைகளை சரியானபடி வளர்க்க வேண்டுமென்று தேவன் விரும்புகிறார். சகோதரிகள் பிள்ளைகளை வளர்த்து நற்சாட்சி பெற்றவர்களாய் இருக்கவேண்டுமென்று 1 தீமோ. 5:10ல் பார்க்கிறோம்

பிள்ளையானவன் நடக்க வேண்டிய வழி தான் என்ன? எபேசியர் 6:4ன்படி கர்த்தருக்கேற்ற சிட்சையில் வளர்ப்பது. ஆம் ! பிள்ளைகள் தவறு செய்யும்போது அநேக தாய்மார்கள் பிள்ளைகள் செய்யும் தவறுகளை அல்லது அவர்களது ஆகாத சம்பாஷணைகளைக் குறித்து பெருமையடைவது உண்டு. இது எவ்வளவு பயங்கரமான காரியம் ! கிறிஸ்தவ சகோதரிகள் எனக் கூறிக்கொள்ளும் நாம் பிள்ளைகள் தவறு செய்யும்போது பிரம்பை கையாள வேண்டும். பிரம்பை கையாளாதவன் தன் மகனைப் பகைக்கிறான் என வேதம் எச்சரிக்கிறது. நாம் உண்மையாகவே பிள்ளைகளை நேசிக்கிறோம் என்போமாகில் கர்த்தருக்கேற்ற இப்படிப்பட்ட சிட்சைகள் அவசியம். கர்த்தரும் தான் நேசிக்கிற புத்திரனை சிட்சிக்கிறார் அல்லவா !

நம் பிள்ளைகளுக்கு நாம் கர்த்தருக்கடுத்த காரியங்களையும் உபதேசிக்க வேண்டும். கர்த்தருடைய வல்லமைகளையும், கர்த்தர் நம்முடைய முற்பிதாக்களுக்குச் செய்த அடையாளங்களையும், அற்புதச் செயல்களையும், கர்த்தர் தம் பிள்ளைகளை நேசித்து வழிநடத்திய விதத்தையும் வீட்டில் உட்கார்ந்திருக்கிற போதும், வழியிலே நடக்கிற போதும், படுத்துக் கொள்ளுகிற போதும், எழுந்திருக்கிற போதும் அவைகளைக் குறித்து பேசுவீர்களாக (உபாகமம் 12:20). ஆம் ! இன்றைய நாட்களில் எங்கு பார்த்தாலும் T.V., சினிமா, வீடியோ கேசட் என பல கேளிக்கைகள் நிறைந்து காணப்படுகிறது. நம் பிள்ளைகள் இப்படிப்பட்ட காரியங்களைக்

கவனித்துக்கொண்டுப்போகக்கூடும். ஆகவே பிள்ளைகளுக்கு கர்த்தரின் அன்பைக் குறிக்கும் பல சம்பவங்களைக் கூறி அவர்களைத் தீமைக்கு விலக்கிக் காக்க வேண்டியது ஒவ்வொரு தாய்மார்களின் கடமையாகும்.

சிறு பிள்ளைகள் தானே போக போக எல்லாம் சரியாகிவிடும் என்றிருக்கக் கூடாது. புறஜாதிகளுடைய முறைமைகளை நம் பிள்ளைகள் கற்றுக்கொண்டு நடப்பது நம் கர்த்தருக்கு அருவருப்பானது என்பதை திட்டமாய் அவர்களுக்குப் போதிக்க வேண்டும். சிறுவயதில் அவனுக்கு நாம் உபதேசிக்கும் போதனை அவன் முதிர்வயதிலும் விடாதிருப்பான் என வேதம் சொல்லுகிறது. சிறுவயதிலே பிள்ளைகளை சரிசெய்யும் போது நாம் அவர்கள் ஆத்துமாக்களை தப்புவிப்பவர்களாய் இருப்போம் (நீதிமொழிகள் *23;14*). இப்படிச் செய்தால் நாம் வயதுசென்றவர்களாயிருக்கும் போதும் நம் பிள்ளைகள் நம்மை அசட்டை செய்ய மாட்டார்கள்.

நம் பிள்ளைகள் இப்படியாக கர்த்தருக்கேற்ற சிட்சையிலும், போதனையிலும் வளர்க்கப்படும் போது நற்சாட்சி பெறுவோம். உன்னை பெற்றவள் மகிழ்வாள் என சமுதாயம் போற்றும். இப்படிப்பட்ட பிள்ளைகள் எபேசியர் *6:1-3*ல் சொல்லப்பட்டது போல பெற்றாருக்குக் கர்த்தருக்குள் கீழ்படிவார்கள். பிள்ளைகளுக்கு நன்மை உண்டாயிருப்பதற்கும், பூமியிலே அவர்கள் வாழ்நாள் நீடித்திருப்பதற்கும், வாக்குத்தத்தமுள்ள முதலாம் கற்பனையை அவர்கள் நிறைவேற்றுவதற்கும் சகோதரிகளாகிய நாம் கருத்தாய் போதிப்போமாக !

## ஸ்திரீகள்

1. உபதேசம் பண்ணவும் 1 தீமோ. 2:12.
2. சபைகளில் உங்கள் 1 கொரி. 14:34.
3. பிள்ளைகளை சத்தியத்தில் 2 யோவான் 4.
4. விசுவாசம் 2 தீமோ. 1:5.
5. ஜெபம் 1 தீமோ. 5:5.
6. அடக்கம் 1 தீமோ. 2:11.
7. தகுதியான வஸ்திரம் 1 தீமோ. 2:10.
8. வீட்டோரங்களில் கனிதரும் செடி சங்கீதம் 102:3.

❄❄❄❄❄❄

## இம்மாத வேத அறிவுப்போட்டி:

முதல் ஐந்திற்கு வசன ஆதாரத்துடனும், கடைசி ஐந்திற்கு வேதத்திலிருந்து விடை மட்டும் எழுதி இம்மாதம் 30ம் தேதிக்குள் அனுப்பி வைக்கவும்.

1. வாயானது போஜனத்தை ருசி பார்க்கிறது போல செவியானது வார்த்தைகளை எப்படிப் பார்க்கும்?
2. எதின் உயரமும், எதின் ஆழமும், எவர்களின் இருதயங்களும் ஆராய்ந்து முடியாது?
3. ஜீவத்தண்ணீர் ஊற்றாகிய என்னை விட்டுவிட்டார்கள், தண்ணீர் நிற்காத தொட்டிகளாகிய வெடிப்புள்ள தொட்டிகளைத் தங்களுக்கு வெட்டிக் கொண்டார்கள். இவர்கள் யார்?
4. நீர் புத்திரனேயானால் யார் மூலமாய்த் தேவனுடைய சுதந்தரனாயிருக்கிறாய்?
5. எக்கிரியைகளைச் செய்கிறதற்கு நாம் கிறிஸ்து இயேசுவுக்குள் சிருஷ்டிக்கப்பட்டு தேவனுடைய செய்கையாயிருக்கிறோம்?
6. கல்லைப் போலானவன் யார்?
7. சகல துரைத்தனங்களுக்கும் அதிகாரத்துக்கும் தலைவராயிருக்கிறவர் யார்?
8. துர்க்குணத்திலே குழந்தைகளாயும், எவையிலோ தேறினவர்களாயுமிருங்கள் என்று பவுல் குறிப்பிடுகிறார்?
9. நீங்கள் கர்த்தராகிய கிறிஸ்துவைச் சேவிக்கிறதினாலே எப்படிப்பட்ட பலனை கர்த்தராலே பெறுவீர்கள்?
10. தேவபக்தியில்லாதவர்கள் நியாயந்தீர்க்கப்பட்டு அழிந்துபோகும் நாள் வரைக்கும் எவைகள் காக்கப்பட்டிருக்கிறது?

## ஜூலை மாத இதழின் வேத அறிவுப்போட்டியில் வெற்றி பெற்றவர்கள்:

1. R.பெருமாள் – கோபி
2. J.மேரி எலிசபெத் கலைவாணி – வத்தலக்குண்டு
3. C.கனகவல்லி – M.இராமச்சந்திராபுரம்
4. S.எஸ்தர் ராணி – தூத்துக்குடி

## ஜூலை மாத இதழின் விடைகள்:

1. அதையே – யோபு 4:8
2. தாவீது – சங்கீதம் 57:4
3. பிராணனை – நீதி. 13:3
4. அறிக்கை – ரோமர் 10:10
5. பவுல் – 1 தெச. 2:4

6.நோவிருக்கும், துக்கமுண்டு
7.ஒலிவமலை
8.ஸ்தேவான்
9.அக்கினியும் கந்தகமும் எரிகிற
10.பாக்கியவான்கள்

> வேத வாக்கியங்களை ஆராய்ந்து பாருங்கள்; அவைகளால் உங்களுக்கு நித்திய ஜீவன் உண்டென்று எண்ணுகிறீர்களே, என்னைக் குறித்துச் சாட்சி கொடுக்கிறவைகளும் அவைகளே - இயேசு (யோவான் 5:39).

**MONTHLY MAGAZINE**

Regd. No. 84661 - 92

Postal Regn.No.TN/DDL/19

Edited by B.Arjunan on behalf of Church of Christ

2.2.102-D/5 Rajan Nagar

*Batlagundu and Printed at Novelty Press for Shanthi Printers*

**BATLAGUNDU - 624 202.**

எங்களோடு சேர்ந்து தேவனை ஆராதிக்க அன்புடன்

அழைக்கின்றோம்

ஞாயிறு காலை 9.00 மணி

வியாழன் மாலை 6.45 மணி



**கிறிஸ்துவின் சபை**

*2.2.102–D/5 ராஜன்நகர்*

வத்தலக்குண்டு - 624 202

திண்டுக்கல் மாவட்டம்.

Phone: (04543) 23278

From

**WORD OF CHRIST**

*POST BOX NO.5*

**BATLAGUNDU - 624 202**

***S.INDIA.***

To